முச்சந்தி முரளி



"கப்புடு காக்காவுக்கே
இந்த சந்தேகம்
வாற அளவுக்கு
ஆட்சியின்ர
விறுத்தம் இருக்கு
கண்டியளோ"

Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 110

வெள்ளிக்கிழமை
15 மார்ச் 2024

பங்குனி 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055



சபாநாயகருக்கு எதிராக

# மார்ச் 20 இல் வாக்கெடுப்பு

கொழும்பு, மார்ச் 15

சபாநாயகர் மஹிந்தயாப்பா அபேவர்த்தனவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது மார்ச் 20 ஆம் திகதி மாலை வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. 11

## வாக்கெடுப்பின்போது 'கெத்து' காட்டுவோம்

சாகர சவால்

கொழும்பு, மார்ச் 15

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்து ஆளுங்கட்சியின் பலத்தை வெளிப்படுத்துவோம் - என்று பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார். 11

வெடுக்குநாறிமலை விவகாரம்;

## கைதானவர்கள் நேற்றும் உணவு தவிர்ப்புப் போர்!

மூன்றாவது நாளாகத் தொடர்கின்றது

வவுனியா, மார்ச் 15

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில், சிவராத்திரி வழிபாடுகளில் ஈடுபட்ட போதுகைதுசெய்யப்பட்டுவிளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் நேற்று மூன்றாவது நாளாகவும் தமது உணவு தவிர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கடந்த சிவராத்திரி தினத்தன்று கைதுசெய்யப்பட்ட ஆலயபூசகர் உள்ளிட்ட 8 பேரையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சந்தேகநபர்கள் அனைவரும் வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஐவர் தமக்கு நீதி வழங்கக்கோரி உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்த இந்தப் போராட்டம் நேற்று 11

## இது பெரமுன ஆட்சிதானா?

பஸிலுக்கும் சந்தேகமாம்

கொழும்பு, மார்ச் 15

இலங்கையில் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருப்பது. பொதுஜன பெரமுனவின் ஆட்சிதானா என்ற சந்தேகம் தமக்கு வலுவாக உள்ளதாக பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரான பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார். 11

## யானை மிதித்து பெண் மரணம்

மன்னார், மார்ச் 15

யானை மிதித்ததில் குடும்பப் பெண்ணொருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார். மன்னார், மடுப் பொலிஸ் பிரிவில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

வவுனியாவைச்சேர்ந்த குறித்த பெண்ணின் குடும்பம், கடந்த நான்கு மாதங்களின் முன்னர், மன்னார், மடுப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கட்டையடம்பன் 11

வெடுக்குநாறிமலை விவகாரம்;

## கைதானோருக்காக இன்று போராட்டம்

நாளையும் தொடரத் தீர்மானம்

வவுனியா, மார்ச் 15

வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய வளாகத்தில் மகாசிவராத்திரி வழிபாடுகளின்போது பொலிஸார் மேற்கொண்ட அடக்குமுறையைக் கண்டித்தும், கைதானவர்களை விடுவிக்குமாறு வலியுறுத்தியும் இன்று போராட்டமொன்று மேற்கொள்ளப்படவுள்ளது. 11



யாழ். பல்கலைக்கழகத்தின்

## 38 ஆவது பட்டமளிப்பு ஆரம்பமானது நேற்று!

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 38 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி நேற்று வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 11

## தண்ணீர்த் தொட்டிக்குள் பெண்ணின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 15

தண்ணீர்த்தொட்டிக்குள் இருந்து குடும்பப் பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குணரத்தினம் சுசிலா (வயது - 55) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மயிலங்காடு - ஏழாலை தெற்கைச் சேர்ந்த அந்தப் பெண் தோட்டத்துக்குச் சென்றுவிட்டு நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் வீட்டுக்குத் திரும்பி குளிப்பதற்காகச் சென்றுள்ளார். இரவு 11 மணியளவில் அந்தப் பெண்ணின் மகன் சென்று பார்த்தபோது அவர் தண்ணீர்த் தொட்டிக்குள் சடலமாக மிதந்துள்ளார்.

உயிரிழந்தவருக்கு வலிப்பு நோய் இருப்பதாக 11

## உழவியந்திரம் தடம்புரண்டு மூன்று மாணவர்கள் காயம்

பக்.11

விவசாயத் தேவைகருதி

## 278 ஏக்கர் நிலப்பரப்பு பலாலியில் விடுவிப்பு

மார்ச் 22 இல் கையளிக்க வருகிறார் ரணில்




யாழ்ப்பாணம், மார்ச் 15

விவசாயத் தேவைகளின் நிமித்தம், யாழ்ப்பாணம், பலாலியில் 278 ஏக்கர் நிலப்பரப்புக் காணி எதிர்வரும் 22ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் விடுவிக்கப்படவுள்ளது என யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக வட்டாரங்களில் இருந்து 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றைப் புறக்கணித்து அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்



## தவத்திரு அகத்தியர் அடிகளார் கோரிக்கை

**திருகோணமலை, மார்ச் 15**

**வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் பொலிஸார் மேற்கொண்ட அத்துமீறல்கள் தொடர்பில் அரசாங்கத்துக்கு அழுத்தத்தைப் பிரயோகிக்கவும், சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகவும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தைப் புறக்கணிக்கவேண்டும் என்று ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.**

வடக்கு- கிழக்குத் தமிழ்த்தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் சார்பில், அதன் தலைமை ஒருங்கிணைப்பாளர் தவத்திரு அகத்தியர் அடிகளாரால் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மகாசிவராத்திரி தினத்தில் வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் நடைபெற்ற அரசகட்டமைப்பின் அத்துமீறல் மற்றும் பொலிஸாரின் அட்டூழியங்கள் என்பவற்றின் விளைவாக ஆலயப் பூசகர் உட்பட எண்மர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதை அறிவீர்கள்.

வடக்கு, கிழக்கில் தொடர்ச்சியாக சைவ ஆலயங்கள் முக்கியமாக புராதன ஆதிசிவன் ஆலயங்களில் வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டுத் தமிழர்கள் மீது போலி வழக்குகள் பதிவு செய்வதும், அவை அரச இயந்திரத்தின் உதவியுடன் குறிப்பாக பொலிஸார், தொல்லியல், வனவளத் திணைக்களங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு உள்ளூர் தமிழ்மக்கள் சொல்லொணாத் துயரத்தை அனுபவிப்பதும் தொடர்கதையாக உள்ளது.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் நாடாளுமன்றத்தை உரிய தீர்வு கிடைக்கும் வரை புறக்கணிக்கும் தீர்மானத்தை எடுத்து இந்தப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்க வேண்டும்- என்றுள்ளது. (எ-66)

# சிறுமி துஷ்பிரயோகம்; 10 வருட கடூழியச் சிறை

கொழும்பு, மார்ச் 15

நானுஓயாவில் பாடசாலைச் சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் நுவரெலியா மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்டவருக்கு 10 வருட கடூழியச் சிறை தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பை நுவரெலியா மேல் நீதிமன்ற நீதிபதி விராஜ் வீரசூரிய நேற்றுமுன்தினம் வழங்கினார்.

மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஐந்து இலட்சம் ரூபா நஷ்டஈடாக வழங்கவேண்டுமென தீர்ப்பு வழங்கிய நீதிபதி இந்தத் தொகையை வழங்காத பட்சத்தில் மேலும் மூன்று வருடங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் தீர்ப்பளித்தார். (ச-இ)

# தவறான முடிவெடுத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

வடமராட்சி, மார்ச் 15

குடும்பத் தகராறு காரணமாக இளங்குடும்பஸ்தர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரைமாய்த்துக் கொண்டுள்ள சம்பவம் நேற்றுமுன்தினம் வடமராட்சி அல்வாய் வடமத்தி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த சுரேஷ் விஜயகாந் (வயது - 29) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார். (எ-100)

# எரிக்கும் வெயில்; இளநீருக்கு கிராக்கி

தற்போது நிலவும் கடுமையான வெப்பம் மற்றும் வறட்சியான காலநிலையால் செவ்விளநீருக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதுடன் அவற்றின் விலையும் எகிறியுள்ளது என்று நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

ஒரு செவ்விளநீர் 200 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகிறது. தெற்கிலிருந்து கடந்த ஒரு வார காலமாக செவ்விளநீர் எடுத்துவரப்படவில்லை. செவ்விளநீர் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதனாலேயே உள்நாட்டில் செவ்விளநீருக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-17)

# மோ.சைக்கிள் விபத்தில் பெண் படுகாயம்



யாழ்ப்பாணம், மார்ச் 15

மோட்டார் சைக்கிள் மோதியதில் பெண்ணொருவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த விபத்து சாவகச்சேரி வேம்படிச் சந்திக்கருகே கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்துள்ளது.

பெண் வீதியைக் கடந்து செல்ல முற்பட்டபோதே வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

விபத்தை ஏற்படுத்திய சந்தேகநபர் தப்பிச்சென்ற நிலையில் அவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-131)

# கால்நடைகளைப் பாதுகாக்க வீதிச்சமிக்ஞை அமையுங்கள்

முல்லைத்தீவு, மார்ச் 15

திருமுறிகண்டியிலிருந்து கிளிநொச்சியின் இரணைமடுச் சந்தி வரையான ஏ-9 வீதியில் நாள்தோறும் வாகன விபத்துகளில் கால்நடைகள் உயிரிழப்பதும் படுகாயமடைவதும் நடைபெற்றுவரும் நிலையில் வீதிக்கு அருகில் கால்நடைகளைப் பாதுகாப்பதற்கு உரிய வீதிச்சமிக்ஞை பலகைகளை அமைக்க வேண்டும் என்று இந்துபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. திருமுறிகண்டி, பொன்நகர், இந்துபுரம், அறிவியல்நகர் உட்படப் பல பகுதிகளில் இருந்து கனகாம்பிகைக் குளத்தை நோக்கி குடிநீருக்காக வரும் கால்நடைகள் ஏ-9 வீதியில் பயணிக்கின்ற வாகனங்களில் சிக்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-13)

# ஆதன உரிமங்கள் பெற நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ்.மாநகரசபையால் வரியிறுப்பாளர்களின் நன்மைகருதி முன்னெடுக்கப்படவுள்ள நடமாடும் சேவை நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை காங்கேசன்துறை வீதி தட்டாதெரு சந்தியிலுள்ள கலாஜோதி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. 01,02, 08,09 ஆம் வட்டாரங்களுக்கான ஆதன வரி அறிவித்தல் விநியோகித்தல், பெயர்மாற்ற விண்ணப்பப்படிவம் வழங்கல், சைக்கிள் உரிமம் உள்ளிட்ட சேவைகள் என்பன இடம்பெறவுள்ளன. அத்துடன் அனைத்து வட்டாரங்களினதும் ஆதனவரி நிலுவைகள், நடப்பாண்டு ஆதனவரி, தண்ணீர்க்கட்டணம் மற்றும் வியாபார வரி என்பவற்றை செலுத்தலாம் என்றும் யாழ்.மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (ச)

# துப்பாக்கிச்சூடுகளை தடுக்க நடவடிக்கை!

## பொலிஸ்மா அதிபர் பணிப்பு

கொழும்பு, மார்ச் 15

தென் மாகாணத்தில் அண்மையில் இடம்பெற்றுவரும் குற்றச் செயல்கள் மற்றும் துப்பாக்கிச்சூடுகளைத் தடுக்க விசேட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பணிப்புரை விடுத்துள்ளார்.

மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் ஆகியோருக்கு இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட பாதாள உலக உறுப்பினரான 'சமன்கொல்லா' என்ற அகம்பொடி சஜித் சமன் பியந்தவின் வீட்டின் மீது நேற்று அதிகாலை துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. பாதாள உலகக்குழு செயற்பாடுகள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகம் என்பனவற்றை இல்லாதொழிக்கும் வரையில் 'யுக்திய' நடவடிக்கை தொடரும்.

அப்பாவிப் பொதுமக்களை படுகொலை செய்யும் பாதாள உலகக் குழு உறுப்பினர்களுக்கு இனி எவ்வித மன்னிப்பும் கிடையாது என்றும் பொலிஸ்மா அதிபர் எச்சரித்துள்ளார். (ச-இ)

# ஆசிரிய வெற்றிடங்கள்; போட்டிப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 15

இலங்கை ஆசிரியர் சேவையின் 3ஆம் வகுப்பு I (அ) தரத்துக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையின் கட்டம் 01,02 என்பவற்றுக்கான பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் நடத்தப்படவுள்ளது.

இதனூடாக வடக்கு மாகாணப் பாடசாலைகளில் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழி மூலப் பாடங்களில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

குறித்த பரீட்சைக்குரிய புதிய அட்டைகள் (இளஞ்சிவப்பு) வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இன்று 15ஆம் திகதிவரை புதிய அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் பரீட்சைகள் பிரிவின் 021 2219939 என்ற இலக்கத்துடன் எதிர்வரும் 18ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவில் இலங்கை ஆசியாவில் முதலிடம்



கொழும்பு, மார்ச் 15

**ஆசியாவிலேயே அதிக நீரிழிவு நோயாளர்களைக் கொண்ட நாடாக இலங்கை மாறியுள்ளது. இலங்கையில் நான்கு பேரில் ஒருவருக்கு, அதாவது 23 வீதத்தினருக்கு நீரிழிவு நோய் இருப்பது ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.**

மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம், சுகாதாரக் கொள்கை நிறுவனம் மற்றும் ரஜரட்ட ருஹுனு கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியன இணைந்து கடந்த ஆண்டு நடத்திய ஆய்வில் இந்த விடயம் கண்டறியப்பட்டது. இதன் பின்னணியில் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன, நீரிழிவு நோய் தொடர்பில் எச்சரிக்கை விடுத்துள்ளார். சனத்தொகை விகிதத்தின்படி ஆசியாவிலேயே அதிக நீரிழிவு நோயாளர்களைக் கொண்ட நாடாக இலங்கை மாறியுள்ளது. மக்கள் அதிகளவு சீனியைப் பயன்படுத்துவதற்கான தூண்டுதலே இதற்குக் காரணம் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



## ரூபவாஹினி கடனைச் செலுத்தாத டயானா

நவகமுவ பெரஹரவின் நேரடி ஒலிபரப்புக்காக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கு வழங்கவேண்டிய 9 இலட்சம் ரூபாவை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே செலுத்தத் தவறியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி இடம்பெற்ற நவகமு பிரதேச விஹாரை ஒன்றின் 188ஆவது ரந்தோலி பெரஹராவை டயானா கமகேவின் வேண்டுகோளுக்கிணங்க ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் நேரடி ஒளிபரப்புச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

## கெஹலிய மீது பிறிதொரு வழக்கு

சட்டவிரோத ஜி.ஐ. குழாய் கொள்வனவு விவகாரம் தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல முன்வைத்த ஆட்சேபனைகள் கொழும்பு மேல் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி இந்த வழக்கு விசாரணை முன்னெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வெகுஜன ஊடக அமைச்சராக இருந்தபோது கெஹலிய ரம்புக்வெல, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் 9 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா நிதியை சட்டவிரோதமாகப் பயன்படுத்தி குழாய்களைக் கொள்வனவு செய்திருந்தார் என்றும் அதனால் அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது என்றும் அவருக்கெதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தது.

இந்த நிலையிலேயே கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக இந்த வழக்கைத் தொடரமுடியாது என பிரதிவாதிகள் முன்வைத்த ஆரம்ப ஆட்சேபனையை நீதிமன்று நிராகரித்துள்ளது. (ச-இ)

## மருத்துவபீடத்துக்கு எழுகின்றது எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 15

தேசிய வியாபார முகாமைத்துவக் கற்கைகள் நிறுவனம் மருத்துவபீடத்தை ஆரம்பிப்பதற்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது. மருத்துவபீடம் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும். தர நிர்ணயம் உறுதிப்படுத்தப்படவேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் சமில் விஜயசிங்க தெரிவித்துள்ளார். (ஒ-6)


## கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் வெளிப்படைத்தன்மை பேணுக

*எதிர்க்கட்சி சுட்டிக்காட்டு*

கொழும்பு, மார்ச் 15

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் சர்வதேச கடன் மறுசீரமைப்புத் தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டாலும், அடுத்து வரும் அரசாங்கத்துக்கும் அந்த ஒப்பந்தத்தை அவ்வாறே செயற்படுத்த வேண்டிய பொறுப்புக் காணப்படும் என்பதால் அதில் வெளிப்படைத் தன்மை பேணப்படவேண்டும்- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா வலியுறுத்தியுள்ளார். (ச-இ)

## இலவசத்தை விரும்பினால் மீண்டும் இருண்டயுகமே!



*ஜனாதிபதி ரணில் எச்சரிக்கை*

அனைத்தையும் இலவசமாகக் கொடுப்பதுதான் பொருளாதாரம் வீழ்ச்சியடைய பிரதான காரணம். இலவசமாகக் கொடுப்பதற்காக வேறொரு வரிடமிருந்து அறவிடவேண்டியுள்ளது. இதனாலேயே வெளிநாட்டுக் கடனைச் செலுத்தமுடியாத நிலை ஏற்பட்டது. அந்தத் தவறைச் செய்ய நாம் தயாரில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

-இவ்வாறு யுனைட் யூத் இளைஞர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த 'இளைஞர் எமது எதிர்காலம்' என்ற சிநேகபூர்வ சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நம் நாட்டில் எல்லாவற்றையும் இலவசமாகக் கொடுத்தோம். இலவச நிவாரணம் வழங்கப் பணம் அச்சிடப்பட்டது. இதனால், நாம் பெற்ற வெளிநாட்டுக் கடனைச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இதுபோன்ற தவறைச் செய்ய நாம் தயாரில்லை. இந்தத் தவறுக்கு இடமளிக்கக்கூடாது-என்றார். (ச-இ)

## புதினம் தெரியுமோ?

'உடையவன் இல்லாட்டி ஒருமுழம் கட்டை' என்னதான் ஒப்புக்குச் சப்பாணியா ஆலையில்லா ஊரில இலுப்பம்பூவை சக்கரைக்குப் பதிலாப் பாவிச்சாலும் சக்கரை இருக்கிற மாதிரி வராது தானே. அப்பிடித்தான் இப்ப யாழ்ப்பாணம், கிளிநொச்சி எண்டு ரண்டு மாவட்ட நிர்வாகங்களும், மாவட்டச் செயலாளர்மார் இல்லாமலே முக்கித் தக்கி ஓடிக்கொண்டிருக்குது. இதுக்கு முதல் இந்த ரண்டு மாவட்டத்துக்கும் மாவட்டச் செயலாளராக இருந்தவை பெஞ்சனில போய், ஒருகிழமை தாண்டியும் இன்னும் அவையின்ர இடத்துக்கு புதிசா ஒருத்தரையும் போடேலை. தற்காலிகமா அவையின்ர வேலையளைச் செய்யிறதுக்கு ஒவ்வொருத்தரைப் போட்டிருந்தாலும், அவைக்கும் கன விசயங்களைச் செய்யிறதுக்கு உரிய அதிகாரம் இல்லை. வழக்கமா இப்பிடி மாவட்டச்செயலர்மார் பெஞ்சனில போகப்போயினம் எண்டால், அதுக்கு முதலே அவையின்ர இடத்துக்கு ஆளை செலக்ட் பண்ணிப்போடுவினம். பழையவர் பெஞ்சனில போன அதேநாளில புது ஆள் அந்தக் கதிரையில வந்து இருப்பார். சிலவேளை ஒண்டிரண்டு நாள் பிந்தலாம். ஆனால் இப்பிடிக் கிழமைக் கணக்கா மாவட்டச்செயலர் இல்லாமல் யாழ்ப்பாணமும், கிளிநொச்சியும் இருக்கேலை.

இந்தமுறை இப்பிடிக் கிழமைக்கணக்கா இந்த ரண்டு மாவட்டச் செயலாளர் பதவிக்கும் புது ஆக்கள் இன்னமும் போடுப்படாதுக்குப் பின்னால கன்க்க காரணங்கள் இருக்கு. முக்கியமான காரணம், இந்த ரண்டு மாவட்டச் செயலர்மாரும், பெஞ்சனில போக விருப்பப்படேலை. அமைச்சரைப் பிடிச்சால் எப்பிடியாவது இன்னும் ஒண்டிரண்டு வருசமாவது பதவியை விட்டு இறங்காமல் இருக்கலாமெண்டு நம்பிட்டினம். 'அதெல்லாம் நான் அமைச்சரவைப் பத்திரம் போட்டு எல்லாத்தையும் வெண்டு தருவன்' எண்டு அமைச்சரும் ஆசைகாட்டினதால, ரண்டு வருசத்துக்கு இந்த மாவட்டங்களுக்கு செயலாளரா புதுசா ஆரையும் போடவேண்டி வராது எண்டு மேல் மட்டங்களும் பேசாமல் இருந்திட்டினம். ஆனால் அமைச்சரோ, இந்த மாவட்டச்செயலர்மாரோ எதிர்பார்க்காத வகையில இவையின்ர காலநீடிப்புக்கு அமைச்சரவை மாட்டனெண்டு மறுத்தான் அடிச்சுப் போட்டுது. அதாலதான் புது ஆளை எடுத்துப் போட அவகாசமில்லாமல் போட்டுதாம்.

இப்ப அவை ரண்டு பேருக்கும் காலநீடிப்பு இல்லையெண்டதால, புது ஆக்களைப்போட அலுவல்கள் அறம்புறமா நடக்குதாம். தங்களை மாவட்டச் செயலராப் போடச் சொல்லி , மேல்நிலையில இருக்கிற அதிகாரிமார் ரணிலின்ர நெருங்கினவை மூலம் தூது அனுப்புகினமாம். ஆனால் இப்ப மூப்பு நிலையில மேல்மட்டத்தில உள்ள அதிகாரிமாரெல்லாம் இன்னும் ஒருவருசத்துக்குள்ள பெஞ்சனில போகவேண்டிய ஆக்களாம். அவையைப் புதிசா மாவட்டச் செயலாளராப் போட்டால், நாலைஞ்சு மாதத்துக்குள்ள அவையும்பெஞ்சனிலபோடுவினம். பிறகு அவைக்குப் பதிலா வேற ஆக்களைத் தேடோணும். அதால நாலைஞ்சு வருசமா பெஞ்சனில போகாமல் இருக்கக்கூடிய அதிகாரிமாரைத்தான் போடப்போயினம் எண்டு கதை. சிலவேளை தென்னிலங்கைப் பக்கம் வேலை செய்துகொண்டிருக்கிறவையும் இஞ்ச வரலாம் எண்டு ஒரு தகவல். எதுக்கும் கொஞ்சம் வெயிட் பண்ணிப் பாப்பம்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எம்.எப். நிபந்தனைகளை நிறைவேற்றாத இலங்கை

**கொழும்பு, மார்ச் 15**

**2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாத இறுதிக்குள் சர்வதேச நாணயநிதியத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படவேண்டிய 33 வீத நிபந்தனைகளை இலங்கை நிறைவேற்றத் தவறியுள்ளது என்று வெரிட்டே ரிசேர்ச் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.**

நிறைவேற்றப்படாத நிபந்தனைகளில் தகவல்களை வெளியிடுதல் (வெளிப்படைத்தன்மை) மற்றும் நிர்வாகத்தை மேம்படுத்தும் சட்டத்தை நிறைவேற்றுவது தொடர்பான நிபந்தனைகளும் அடங்குகின்றன.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு முறையற்ற நிர்வாகத் திறனே முக்கியமான காரணம் என்பதை சர்வதேச நாணயநிதியம் சுட்டிக்காட்டியுள்ளது என்றும், சர்வதேச நாணயநிதியத்தின் தலைமையிலான நிர்வாகத் திறனை கண்டறியும் முதல் ஆசிய நாடாக இலங்கை காணப்படுகின்றது என்றும் அதன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப் பட்ட கடன் வசதியின் இரண்டாம் தவணை 2023 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்றது. புதுப்பிக்கப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ், இலங்கை பெப்ரவரி மாத இறுதிக்குள் 45 நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். 14 நிறைவேற்றப்பட்ட நிபந்தனைகளாகவும் 15 நிறைவேற்றப்படாத நிபந்தனைகளாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

மீதமுள்ள நிறைவேற்றப்பட வேண்டிய 16 நிபந்தனைகள் தொடர்பில் இதுவரை அறியப்படவில்லை என வெரிட்டே ரிசேர்ச் அமைப்பு தெரிவித்துள்ளது. (எ-இ)



## பிரமாண்டமான மேதினப் பேரணி

கொழும்பு, மார்ச் 15

ஐக்கிய தேசியக் கட்சியின் பலத்தைக் காட்டும் வகையில் மிகவும் பிரமாண்டமான முறையில் மே தினக் கூட்டத்தையும் பேரணியையும் நடத்துவதற்கு அந்தக் கட்சி திட்ட மிட்டுள்ளது.

மே தினக் கூட்டம் கொழும்பிலேயே நடைபெறும் எனவும், இடம் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார். (ஒ-44)

## ஆங்கிலமொழிமூல கல்வி 2,500 ஆசிரியர்கள் உள்ளீர்ப்பு

கொழும்பு, மார்ச் 15

ஆங்கில மொழிமூல கல்விக்காகப் புதிதாக 2 ஆயிரத்து 500 ஆசிரியர்களை சேவையில் இணைத்துக்கொள்ள நட வடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

2000ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலைகளில் 8 பாடங்களையும் ஆங்கில மொழியில் கற்பிக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. 23 ஆண்டுகள்

நிறைவடைந்துள்ள நிலையில் 765 பாடசாலைகளில் மாத்திரமே ஆங்கில மொழியில் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. ஆங்கிலமொழியில் கல்வியைத் தொடர சமூகத்தில் பெரும் கேள்வி நிலவுவதால் அதற்கான பாடசாலைகளின் எண்ணிக்கையை ஆயிரமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று அண்மையில் துறைசார் அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதையடுத்தே ஆங்கிலமொழியில் பாடங்களைக் கற்பிக்கக் கூடிய ஆயிரம் ஓய்வுபெற்ற ஆசிரியர்களை 3 வருட ஒப்பந்தகால அடிப்படையில் விரைவில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் அவர் பணிப்புரை விடுத்துள்ளார். (ச-இ)

## மத்தியவங்கி ஊழியர்களின் அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை இரத்துச் செய்ய சட்டவரைவு!

கொழும்பு, மார்ச் 15

இலங்கை மத்தியவங்கி ஊழியர்களின் அதிகரிக்கப்பட்ட வேதனத்தை இரத்துச் செய்வதற்கான சட்ட வரைவு நாடாளுமன்ற பதில் செயலாளர் நாயகம் ஹங்ச அபேரத்னவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில சட்டவரைவைக் கையளித்துள்ளார்.

நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ள இந்தச் சட்ட வரைவில் மத்தியவங்கி ஊழியர்களின் வேதனத்தை அதிகரிப்பது தொடர்பில் நிதியமைச்சரின் இணக்கப்பாட்டைப் பெறுவதைக் கட்டாயமாக்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு 16ஆம் இலக்க இலங்கை மத்தியவங்கிச் சட்டத்தைத் திருத்துவதற்கான இந்தச் சட்டவரைவு சட்டமா அதிபரின் பரிசீலனைக்காகச் சமர்ப்பிக்கப்படும் என்று நாடாளுமன்ற பதில் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (எ-இ)



## சட்டவிரோத மீன்பிடி ; மேலும் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 15

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு கடற்பகுதியில் சட்டவிரோதமான முறையில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட மீனவர் ஒருவர் கடற்படையால் கடந்த செவ்வாய்க் கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்கும் விதமாகக் கடற்படையினர் தொடர் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் வெற்றிலைக்கேணி கடற்படையினர் கட்டைக்காடு கடற்பகுதியில் சுற்றிவளைப்பை மேற்கொண்டபோதே ஒளி பாய்ச்சி மீன்பிடித்த குற்றச்சாட்டில் குறித்த மீனவர் கைது செய்யப்பட்டார். (ப-27)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள். மகிழ்ச்சி ஏற்படும். அனுகூலம் உண்டாகும். நற்பலன் அதிகரிக்கும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகளால் தொல்லைகள் நீங்கும். நண்பர்கள் மூலம் காரியம் அனுகூலமாகும். பணஉதவி கிடைக்கும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**மிதுனம்:** ஆதரவு உற்சாகம் தரும். திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். செலவுகள் ஏற்படக்கூடும். சுபச்செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு. பொறுப்புகளை பொறுப்புணர்ந்து செய்வீர்கள்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். எதிர்பாராத ஆதாயம் உண்டாகும். புதிய முயற்சிகளை தொடங்குவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் தேவைப்படும். வியாபாரம் வழக்கம்போல் நடைபெறும்.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். மற்றவர்களுடன் பேசும்போது வார்த்தைகளில் நிதானம் தேவை. உடல்நலனில் அக்கறை காட்டவும். சிரமங்கள் குறையும். பணிச்சுமை அதிகரிக்கும். உடல் அசதி ஏற்படக்கூடும்.

**கன்னி:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும். மனதில் அடிக்கடி குழப்பம் ஏற்படக்கூடும்.

**துலாம்:** ஆதாயம் உண்டாகும். உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்படும். வியாபாரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும். நன்மைகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம் :** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். அந்நியோன்யம் அதிகரிக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. வியாபாரம் சுமாராகத்தான் இருக்கும்.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும். அறிமுகமும், ஆதாயமும் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். குடும்பத்துடன் குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். செலவு செய்யவேண்டி வரும்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். பேசும் வார்த்தைகளில் மட்டும் நிதானம் தேவை. எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அகலித்துச் செல்லும் விரிசல்கள்

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலைவழக்கில் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டவர்கள் தங்கள் குடும்பத்துடன் இணைவது மீண்டும் இந்திய மத்திய அரசால் தாமதிக்கப்பட்டிருக்கின்றது.

விடுவிக்கப்பட்டவர்களில் ஒருவரான சாந்தன், தன் விடுதலையை அனுபவிக்காமல் - தன் உறவுகளைச் சந்திக்காமல் இவ்வுலகை விட்டுப் பிரிக்கப்பட்டிருக்கும் நிலையில் - ஏனைய மூவரும் விடுதலை ஏக்கத்துடன் இன்னமும் இந்திய சிறப்புத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சிறப்புமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முருகன், ரொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோருக்கான கடவுச்சீட்டு வழங்கும் செயன்முறைகள் இந்திய மத்திய அரசாங்கத்தின் பின்னடிப்பால் இழுபறி நிலையில் இருக்கின்றன. முருகன், ரொபேர்ட் பயஸ் ஆகியோர் 1990ஆம் ஆண்டு தமிழகத்துச் சென்று அகதிகளாகப் பதிவு செய்துகொண்டவர்கள். ஜெயக்குமார், ரொபேர்ட் பயஸின் மைத்துனர். திருச்சியில் உள்ள சிறப்புமுகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இவர்கள் இந்திய அரசாங்கத்தின் பயண ஆவணங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். பெரும் சட்டப் போராட்டத்தின் பின்னர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட இவர்களை - மீண்டும் சிறப்பு முகாமில் பொலிஸ் கண்காணிப்பில் தங்க வைத்து பெரும் மனித உரிமைமீறலைச்செய்துவருகின்றது அகிம்சையின் மறுபெயர் தாமே எனத் தம்பட்டம் அடிக்கும் காந்திய தேசம்.

திருச்சி சிறப்புமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சாந்தன் இலங்கைக்கு வருவதற்கான கோரிக்கையை முன்வைத்திருந்த நிலையில், பல்வேறு காரணங்களைக் காட்டி இந்திய அரசாங்கமும், இலங்கை அரசாங்கமும் அவருக்கான பயண ஆவணங்களை வழங்குவதை இழுத்தடித்து வந்தன. சிறப்புமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சாந்தன், சரியான மருத்துவக் கவனிப்பின்றி, வீடு திரும்பும் தனது ஆசை நிறைவேறாமலேயே உயிர் பிரிந்தார். இதை இந்திய, இலங்கை அரசாங்கங்களின் திட்டமிட்ட பழிவாங்கல் என்றே நோக்கும் தமிழ் மக்கள் சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனையோரை உடன் விடுவிக்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.

கடந்தகாலங்களில் -பல்வேறு சந்தர்ப்பங்களில் - தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளைச் சிதறடித்த - தமிழ் மக்களைக் கைவிட்ட இந்தியா இந்த விடயத்திலும் தமிழ் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றது. காலங்காலமாகத் தம்மை ஏமாற்றும் இலங்கையிடம் பணிந்து கிடக்கும் இந்தியா என்னும் பிராந்திய வல்லரசு, 30 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்து - வாழ்வின் பெரும்பங்கை சிறைக்கம்பிகளுக்குள் தொலைத்துவிட்டவர்கள் மீது இன்னமும் வன்மம் கொண்டு தண்டிக்க முயல்கின்றது. காந்திய தேசத்தின் இந்தப்போக்கே தமிழ் மக்கள் இந்தியாவை விட்டுத் தூரம்செல்ல வைக்கின்றது. இந்த எண்ணம்-போக்கு தொடருமானால் இலங்கைத் தமிழர்களுக்கும் இந்தியாவுக்குமான விரிசல் அகலிப்பதைத் தடுக்கமுடியாது.



## செயன்முறைகளைப் பின்பற்றாது உருவாக்கப்படும் புதிய சட்டங்கள்

சர்வதேச மன்னிப்புச்சபை அதிருப்தி



**கொழும்பு, மார்ச் 15**

**மக்களின் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை முடக்குவதற்கான புதிய ஆயுதமாக 'நாட்டின் உள்ளகச் சட்டங்கள்' இலங்கை அரசாங்கத்தால் பயன்படுத்தப்படுகின்றன என்று சர்வதேச மன்னிப்புச்சபையின் தெற்காசியப் பிராந்திய ஆய்வாளர் த்யாகி ருவன்பத்திரன சுட்டிக்காட்டியுள்ளார்.**

அவர்மேலும்தெரிவிக்கையில் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலைக்காப்புச்சட்டம்தொடர்பில் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் தொடர்ந்து தமது கரிசனைகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்தச்சட்டம் தவறான முறையில் பிரயோகிக்கப்படக்கூடிய அச்சுறுத்தல் காணப்படுகின்றது. புதிய சட்டவரைவுகளைத் தயாரிக்கும்போது அதனுடன் தொடர்புடைய தரப்பினருடன் கலந்துரையாடுதல்உள்ளடங்கலாக உரிய செயன்முறைகளைப் பின்பற்றவேண்டியது அவசியம். தேர்தலை இந்தவருடம் நடத்துவதற்கு இலங்கை தயாராகிவரும் நிலையில், சர்வதேச மனித உரிமைசார் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான தன்முனைப்பை இலங்கை வெளிப்படுத்த வேண்டும் - என்றார். (ச-இ)

## மருந்து மோசடி; மருத்துவர் கைது


கொழும்பு, மார்ச் 15

சர்ச்சைக்குரிய இம்யூனோகுளோபுலின் ஊசி மருந்து இறக்குமதி விவகாரம் தொடர்பில் மருந்து விநியோகப்பிரிவின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் துஷித சுதர்சன கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் புதன்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து அவர் கைதுசெய்யப்பட்டார். (ச-இ)

## மீன்பிடியில் கண்காணிப்பு

மீன்பிடித் தொழிலுக்கு நவீன தொழில்நுட்பம் மற்றும் நவீன செயற்பாட்டு முறைமைகளை அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஆழ்கடல் மீன்பிடிக் கப்பல்களுக்கு கப்பல் கண்காணிப்பு அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கண்காணிப்புத் தரவுகளைப் பயன்படுத்தி மீன்பிடித் தளங்களை முன்னறிவிப்பதும் தற்போது ஆராய்ச்சி மட்டத்தில் செய்யப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)



## விலைகளில் தளர்வு!

கொழும்பு, மார்ச் 15

எதிர்வரும் புத்தாண்டை முன்னிட்டு சில அத்தியாவசியப் பொருள்களின் விலை குறைக்கப்பட்டுள்ளது என்று அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி ஒரு கிலோகிராம் வெள்ளைச் சீனி 265 ரூபாவாகவும் ஒரு கிலோகிராம் மா 175 ரூபாவாகவும் பருப்பு ஒரு கிலோகிராம் 285 ரூபாவாகவும் விலை குறைக்கப்பட்டுள்ளன. (ச-இ)

## தொழில்நுட்ப பாடத்தில் இணைக்கப்படும் 'ஏ. ஐ'

தரம் - 8 மற்றும் அதற்கு மேற்பட்ட வகுப்புகளுக்கு தகவல் தொழில்நுட்ப பாடத்திட்டத்தில் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். அதன்படி தகவல் தொழில்நுட்பத்துடன் செயற்கை நுண்ணறிவும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. அதன் முன்னோடித் திட்டம் எதிர்வரும் மார்ச் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும் கல்வியமைச்சர் குறிப்பிட்டார். (ச-இ)

### நாளை

16.03.2024

சனிக்கிழமை

பங்குனி – 03

சுபநேரம் : 03.19 –04.49

ராகுகாலம் : 09.19 – 10.49

### நாளொரு நல்வார்த்தை

அன்பு நிறைந்த பெண்ணிடம்
காதல் கொள்வது
ஒரு மனிதனை மறுபடியும்
மனிதனாக்குகிறது.

– மார்க்ஸ் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்குமுறைகளுக்கு எதிராக இணைந்து போராடவேண்டும்

## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் அழைப்பு

**வவுனியா, மார்ச் 15**

**அடக்குமுறைகளுக்கு எதிராக நாம் அனைவரும் ஒருமித்து குரல் கொடுக்கவேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி சி.ஜெனிற்றா தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
நீதிக்கான பொறிமுறைகளைத் தேடும் நோக்குடன் ஜனநாயகப் போராட்டங்களைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றோம். தமிழ் மக்கள் மேற்கொள்ளும் அறவழியான போராட்டங்களைக் கூட நசுக்கும் வகையான உத்தரவுகளை வழங்கி கைதுசெய்யும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
ஆலயத்தை வழிபடுவதற்குக் கூட தமிழர்களுக்கு இன்று உரிமை இல்லை. இப்படியான நாட்டில் இனி நாம் எப்படி வாழமுடியும்? இவ்வாறான அடக்குமுறைகளுக்கு எதிராக நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒருமித்து குரல் கொடுக்கவேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது- என்றார். (ஒ-110)

## விருது வழங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 15
தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் வருடாந்த 'பசுமை அமைதி விருதுகள்' வழங்கும் விழா வீரசிங்கம் மண்டபத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.30 மணிக்கு இடம்பெறும்.
தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-66)

## இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், மார்ச் 15
சண்டிலிப்பாய், ஆலங்குளாய் சனசமூகநிலைய அனுசரணையில் குறித்த சனசமூகநிலைய மண்டபத்தில், அமரர் சுரேந்திரன் சதீஷ்குமார் ஞாபகார்த்தமாக நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-63)

## அலங்காரத் திருவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 15
எழுதுமட்டுவாழ், செட்டிகேணி நாச்சிமார் கோவில் அலங்காரத் திருவிழா சிவசிறி வெ. தில்லையம்பலக் குருக்கள் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.
எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 1008 சங்கு முழுக்கு இடம்பெற்று தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும் என ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (ப-9)

## சமுத்திரப் பாதுகாப்பு கலந்துரையாடல் யாழில்

யாழ்ப்பாணம், மார்ச் 15
சமுத்திரப் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஆரம்பகட்டக் கள ஆய்வில் ஈடுபட்டுள்ள அவுஸ்திரேலிய நிபுணர்கள் குழாம், இலங்கைக்கான அவுஸ்திரேலியத் தூதரகத்தின் அரசியல் மற்றும் பொருளாதாரத் துறையின் முதலாம் நிலை செயலாளர் தலைமையில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர். வடக்கு மாகாண மக்களின் தற்போதைய வாழ்வியல் செயற்பாடுகள், பாதுகாப்பு, சுகாதாரம், சுற்றுலாத்துறை, உட்கட்டமைப்பு வசதிகள், சமுத்திரப் பாதுகாப்பு, கடற்றொழில் செயற்பாடுகள், கண்ணிவெடி அகற்றுதல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. (ஒ-26,66-27)



## கழிவுகள் சேகரிப்பு நிலையம் வவுனியாவில் திறந்து வைப்பு

வவுனியா, மார்ச் 15
வவுனியா நகரசபையால் ஹொரவப்பொத்தான வீதியில் மரக்கறி விற்பனைச் சந்தைக்கு முன்பாக திண்மக் கழிவுகள் சேகரிப்பு நிலையம் நகரசபையின் செயலாளர் இராசையா தயாபரன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை திறந்துவைக்கப்பட்டது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட செயலர் த.பி.ஏ.சரத்சந்திர கலந்துகொண்டு நிலையத்தைத் திறந்துவைத்தார். (ஒ-110)

## சிகிச்சை நிலையம் திறப்பு விழா நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 15
கர்ப்பவதிகள் சிகிச்சை நிலையம் திறப்பு நிகழ்வு தொல்புரம் ஆரம்ப மருத்துவப் பிரிவு மண்டபத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தொல்புரம் ஆரம்ப மருத்துவப் பிரிவு பொறுப்பு மருத்துவ அதிகாரி மருத்துவர் குருபரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி , சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், வலி.மேற்குப் பிரதேச செயலர் கவிதா உதயகுமார், வலி.மேற்குப் பிரதேசசபைச் செயலாளர் ச.பாலரூபன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ச)

## தொழில்நுட்பவியல் கற்கைக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 15
தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் கீழ் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பவியல் கற்கைநெறிக்கான சான்றிதழைப் பெறுவதற்கான பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
இந்தக் கற்கைநெறிகள் மாவட்ட அலுவலக கணினிப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளன. எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி விண்ணப்ப முடிவுத் திகதியாகும். விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதியன்று 16-25 வயதுக்குட்பட்டவராக இருக்கவேண்டும்.
அத்துடன் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியுடனும் க.பொ.த. உயர்தர பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியும் இருக்க வேண்டும்.
கற்கைநெறிக்கு விண்ணப்பிப்போர் தமது முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தே.அ. அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள் மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை, மாவட்ட அலுவலகம், இல.44, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டும். மேலதிக விவரங்களுக்கு 021 222 2383 அல்லது 071 4553772 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 15
பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத் தின் நூற்றாண்டு விழா, பாடசாலை திறந்த வெளி அரங்கில் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 3 நாள்கள் தொடர்ந்து நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. பாடசாலை அதிபர் பரமலிங்கம் சந்திரபாகு தலைமையில் இடம்பெறவுள்ள முதலாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பருத்தித்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் கந்தசாமி கண்ணன், நாளை சனிக்கிழமை இடம்பெறும் இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் சிவபாதசுந்தரம் சத்திய
சீலன், நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் மூன்றாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கனகசபை சத்தியபாலன் ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர். (ப)

## கொடியேற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 15
மூளாய் முத்துக்குமார சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை திருமஞ்சத் திருவிழாவும் எதிர்வரும் 23ஆம் திகதி காலை8.30மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச)

## உலர் உணவு கையளிப்பு

கிளிநொச்சி, மார்ச் 15
யாழ்.கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் "பன்னிருமாத ஒளி விளக்கு" நிகழ்ச்சித் திட்டம் கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவில் கடந்த 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது. திட்டத்தில் இரணைமாதாநகர்ப் பகுதியில் மூன்று கலைஞர்களுக்குத் தலா 5,000 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (எ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 05 . 12 . 1938

மறைவு 15 . 03 . 2022

அமரர்

## இராசரத்தினம் முத்தம்மா

(திதி: மாசி மாத வளர்பிறை திரயோதசி 22.03.2024)

பரிவுடன் எம்மை அரவணைத்த கரங்கள்
பறந்தோடிப் போய் ஈராண்டு ஆனதுவோ?
என்றும் எங்களோடு எங்களின் இறைவனாய்
எம்மை வழிநடத்த வணங்குகின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்


ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

கருங்காலி,
காரைநகர்.

என்றும் பசுமை நினைவுகளுடன் :
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(CS/54346) J-1


# ஆயுத இறக்குமதி;இந்தியா முதலிடத்தில்





ஸ்டோக்கேஹாம், மார்ச் 15

சர்வதேச அளவில் அதிகளவு ஆயுதங்களை இறக்குமதி செய்யும் நாடுகளின் பட்டியலில், இந்தியாவே முதலிடத்தில் இருந்து வருகின்றது என்று சுவீடனின் தலைநகரான ஸ்டோக்ஹோமில் செயற்படும் தொண்டு நிறுவனமொன்று அறிக்கையிட்டுள்ளது.

சர்வதேச அமைதியை தன் கருப்பொருளாகக் கொண்டு செயற்படும் 'சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம்', ஆயுத இறக்குமதியில் முன்னிலையில் உள்ள நாடுகள் தொடர்பான தகவல்களை ஆண்டுதோறும் தெரிவித்து வருகின்றது. இதன்படி, கடந்தவருடம் உலகளாவிய ஆயுத இறக்குமதியில் இந்தியாவே முதலிடத்தில் உள்ளதாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள் ளது.

கடந்த வருடம் ஆயுத இறக்குமதியில் இந்தியாவின் பங்கு 9.8 வீதமாகவும், சவூதி அரேபியாவின் பங்கு 8.5 வீதமாகவும், உக்ரைனின் பங்கு 4.9 வீதமாகவும் உள்ளதாக அந்த ஆய்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)


## வேலைவாய்ப்பு

யாழ். நகரில் உள்ள Hotel ஒன்றுக்கு Receptionist (ஆண்/பெண்) தேவை.

தொடர்பு:- 077 240 2093

(CS/54356) J-1



## கிருஸ்ணா அடைவு கடை

பதிவு இல. J/ DS / BR/ 472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் **2023** ஆம் ஆண்டு **31.06.2023** இற்கு முன்னர் அடகு வைத்த நகைகள் யாவற்றையும் **2024** ஆம் ஆண்டு சித்திரை மாதம் **15** ஆம் திகதி **(15.04.2024)** இற்கு முன்னர் மீட்கவும்

மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக்கொள்ளவும் புதுப்பிக்கத் தவறின் **15.4.2024** ஆம் திகதியன்று விற்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்ளுக்கு அறியத்தருகின்றோம்.

குறிப்பு : **2023 ஆம் ஆண்டு 6 ஆம் மாதம் 31 ஆம் திகதிக்கு முற்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.**

**இல. 370, கே.கே. எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 490 0311 , 021 222 5180,**
**077 080 4656**

**உரிமையாளர்**
**இல.09, கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 222 5046**

(Cs.54352) (N-1)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திரு. இலட்சுமணன் இளங்கோவன்




ஈழவள நாட்டின் வடபால் இலங்கும் புங்கை மண்ணின் மைந்தனும் யாழ். இந்து அன்னையின் தவப்புதல்வனும் கல்விச் சேவையிலும் சமூக சேவையிலும் களம் பல கண்ட கனவானுமாகிய திரு. இலட்சுமணன் இளங்கோவன், இன்று 15.03.2024 ஆம் திகதி வடக்கு மாகாண பிரதம செயலாளராக பதவி ஏற்பதையிட்டு, இந்து அன்னையில் கல்வி கற்ற சக நண்பர்களாகிய நாம், அகமகிழ்ந்து, நீவிர் இனிதான பணி தொடர்ந்து இம் மண்ணின் வளமாவீர் என

**சிந்தையினால் வாழ்த்துகின்றோம்.**

வாழ்த்துவோர்:

**ந. சச்சிதானந்தன்**
**இளவரசி றெக்ஸ்ரைல்**
**யாழ்ப்பாணம்**
**அ. அருள்மோகன்**
**(நோர்வே)**
**மற்றும்**
**யாழ். இந்துக் கல்லூரி**
**(1976 - 1984) சக நண்பர்கள்**

Congratulations! Congratulations! Congratulations!

(CS/54377) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உக்ரைனை ஆதரிக்குமாறு ஸ்லோவாக்கியாவில் பேரணி

கீவ், மார்ச் 15

உக்ரைனை ஆதரிக்குமாறு வலியுறுத்தி ஸ்லோவாக் கியாவில் பல்லாயிரம் மக்கள் அரசாங்கத்துக்கு எதிராகப் பேரணி நடத்தியுள்ளனர்.

ஸ்லோவாக்கியா அரசாங்கம் ரஷ்யாவுடன் காட்டிவரும் நெருக்கத்தைக் கண்டித்தே பல்லாயிரம் மக்கள் இணைந்து இந்தப் பேரணியை நடத்தியுள்ளனர்.

ஸ்லோவாக்கியாவில் பிரதமர் றொபேர்ட் பிகோ ஆட்சிக்கு வந்ததிலிருந்து, ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்கு வழங்கிவரும் ஆதரவுகளையும் உதவிகளையும் கடுமையாக விமர்சித்து வருகின்றார். இதையடுத்தே பல்லாயிரம் மக்கள் இணைந்து ஸ்லோவாக்கிய அரசாங்கத்துக்கு எதிராக இந்தப் பேரணியை நடத்தியுள்ளனர்.

உக்ரைனின் நியாயமான கோரிக்கைகள் ஏற்கப்பட வேண்டும். போர்க்குற்றவாளியான புடினுக்கு ஸ்லோ வாக்கியா ஆதரவு வழங்கக்கூடாது என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக் கள் வலியுறுத்தினார்கள். (ம)

**கேள்வி அறிவித்தல் (திருத்தம்)**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்**
**சபை நிதி - 2024 (கட்டம் III)**

வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் 2024.03.07 ஆம் திகதி உதயன். தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் பந்தி இல 3 நீக்கம் செய்யப்பட்டு அதற்கு பதிலாக பின்வருமாறு பந்தி இல 3 பிரதியீடு செய்யப்படுகின்றது.

" தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 01.03.2024 ஆம் திகதிய 01/2024 ஆம் இலக்க பொது அரச நிதி சுற்றறிக்கைக்கு அமைவாகவும் கேள்வி கோரப் படுகின்றது".

தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர். 2024.03.15

**யாழ்ப்பாணம் மாநகர சபை**
**பகிரங்க ஏல விற்பனை**

யாழ். மாநகர சபையின் 2023ம் ஆண்டுக்கான வருடாந்த பொருட் கணக்கெடுப்பில் விற்பனை எனக் காட்டப்பட்ட பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை எதிர்வரும் 28.03.2024 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு மாநகரசபை வளாகத்தில் நடைபெறவுள்ளது. பொருட்களை பார்வையிட விரும்புவோர் 27.03.2024 ஆந் திகதி அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். ஏலத்தில் பங்குபற்ற விரும்பின் மீளளிக்கப்படாத வைப்புத்தொகையாக ரூபாய் 590.00 செலுத்தி ஏலத்தில் பங்குபற்ற முடியும்.

மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
(CR 41909) S-1

# இந்துக் கல்லூரியில் இன்று விவாத அரங்கு



யாழ்ப்பாணம், மார்ச் 15

இந்துக்களின் போரை முன்னிட்டு யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரி எதிர் கொழும்பு இந்துக் கல்லூரியின் விவாத அணிகள் மோதும் சொல்லாடல் விவாத அரங்கு நிகழ்வு, யாழ். இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

'எம்மவர்களின் புலம்பெயர் உறவுகளால் ஈழத்தமிழ் அரசியலுக்குப் பெரிதும் விளைவது ஆதாயமா? ஆதாயம் இல்லையா? எனும் தலைப்பில் குறித்த விவாத அரங்கு இடம்பெறவுள்ளது. (ம-66)

**மரண அறிவித்தல்**



**அருட்சகோதரி பேணாட் சாமித்தம்பி தி.கு**

மட்டக்களப்பு, சித்தாண்டியை சொந்த இடமாகக் கொண்டவரும், அனுராதபுரத்தில் பிறந்தவரும், யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி பேணாட் சாமித்தம்பி தி.கு (14.03.2024) வியாழக்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை (16.03.2024) சனிக்கிழமை மு.ப 9.00 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் சிற்றாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர், இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அருட்சகோதரி தியோவ்வின் குரூஸ்
மாகாணத் தலைவி,
121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(CS 28197) S-1

# கும்பாபிஷேகம்


யாழ்., மார்ச் 15

நயினை தம்ப கைப்பதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத ஸ்ரீ வீரபத்திர சுவாமி ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 6.20 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம-66)

**1ம் ஆண்டு நினைவஞ்சலி**

மண் மகிழ 08 . 09 . 1952

கண் நெகிழ 27 . 03 . 2023



அமரர்
**இளையதம்பி சண்முகதாசன்**
திதி - பூர்வபட்ச ஷஷ்டி 15.03.2024

உயிருக்குள் உயிராக இதயத்தின் துடிப்பாக உன்னத அன்பால் உங்கள் நினைவுகளில் நாங்கள்.

45/9 அம்மன் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
(CS/28190) J-1

**காணி விற்பனைக்கு உண்டு**
**நெல்லியடி நகரத்தில் 15 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- நெல்லியடி நகரத்திலிருந்து 2 km தூரத்தில்
- விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலிருந்து 500m தூரத்தில்
- உச்சி அம்மன் கோயில் அருகாமையில்
- 16 அடிப்பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பெற்றோல் செற் முன் வீதியில் 2 Km தூரத்தில் நெல்லியடி
- பொலிஸ் நிலைய அருகாமை வீதியில் 2 Km தூரம்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை ஐந்து இலட்சம் ரூபாய் மட்டும் (500 000/=)

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை
தொடர்பு: 071 173 3911 / 076 853 5022
(CS28183) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
20 . 04 . 1948



மறைவு
14 . 03 . 2024

**வேலுப்பிள்ளை இராசதுரை**

(ஓய்வு பெற்ற காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்)

10ம் கட்டை ஒழுங்கை சாயுடை மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இராசதுரை அவர்கள் நேற்று (14.03.2024) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-பொன்னுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை-செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், சிந்தாமணியின் பாசமிகு கணவரும், பூமணி, பவளம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் கந்தசாமி, வள்ளிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும், மைதிலி (ஆசிரியர்-தெல்லிப்பழை சைவப்பிரகாசா வித்தியாசாலை), மஞ்சுளா, கஜேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருதரன் (பிரான்ஸ்), சிவகுமார், சத்தியா (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமனாரும் பிருந்தாபன், ஜென்சியா, ஜெஸ்வின், ஜெசிதன், ஜெனிலா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2024) வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மாவிட்டபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**10ம் கட்டை ஒழுங்கை,**
**மாவிட்டபுரம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**074 373 9986**

(CS 28196) V-1


# மூச்சுத் திணறல் காரணமாக குடும்பத்தலைவர் உயிரிழப்பு

மூச்சுத் திறணல் காரணமாக குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஆறுமுகம் சுகந்தன் (வயது - 42) என்பவரே உயிரிழந்தவராவார். இந்தச் சம்பவம் மிருசுவில் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் இரவு உணவு உட்கொண்ட பின்னர் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தபோது மூச்சுவிட சிரமப் பட்டுள்ளார். இதையடுத்து அவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு ஓட்டோவில் அழைத்துச் செல்லப்பட்டபோது செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தின் பணிப்பின் பிரகாரம் தென்மராட்சி பிரதேச கொடிகாமம் பிரிவு திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி சிறேஸ்கரன் தவமலர் விசாரணையை மேற்கொண்டு சாவகச்சேரி ஆதார மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரியின் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-159)


யாழ்.கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலையின், மாணவர் நாடாளுமன்றத்தினால் அயல் பாடசாலைகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பொருண்மியம் நலிந்த மாணவர்களுக்கு, சமுதாய தொடர்பு அபிவிருத்தி மற்றும் சமூக சேவைகள் அமைச்சுகளின் அனுசரணையில் தலா ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில் விருந்தினராக தென்மராட்சி வலய மாணவர் நாடாளுமன்றத்தின் பொறுப்பு அலுவலர் க. ஈஸ்வரன் கலந்துகொண்டார். (ப)



# திருட்டில் ஈடுபட்டவருக்கு நான்கு வருடங்கள் சிறை

யாழ்., மார்ச் 15

கோண்டாவில் பகுதியில் 2021ஆம் ஆண்டுவீடொன்றுக்குள் புகுந்து 20 இலட்சம் ரூபா பணம் மற்றும் 22 பவுண் நகை என்பவற்றைத் திருடிய குற்றவாளிக்கு 4 ஆண்டுகள் மற்றும் 3 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. சாட்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்ட குற்றத்தை எதிரியும் ஒப்புக்கொண்டதையடுத்தே அவருக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. (ம-23)



நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனையில் மகா சிவராத்திரி விழா கடந்த வெள்ளிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (ப-66)



மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவுக்கான முன்னேற்பாட்டுக் கலந்துரையாடல் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் தலைமையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. (ப-66)



கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தீர்த்தோற்சவம் கடந்த சனிக்கிழமை காலை கீரிமலை கண்டகி தீர்த்தக் கடற்கரையில் இடம்பெற்றது. (எ-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் வாராந்தச் சிறப்பு ஒன்றுகூடல் நிகழ்வு கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் த. தவசேகர் தலைமையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் லண்டனிலிருந்து வந்த, சுன்னாகம் கேன் புற்றுநோய்க் காப்பகத்தின் தலைவர் மருத்துவர் கமலா அருணாசலம் , மன நல மருத்துவ நிபுணர் சாந்தி பரமேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ப-66)




மாதாந்த விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் பொங்கல் வழிபாடுகள் நடைபெற்று, ஆச்சிரம முன்றிலில் எழுந்தருளியுள்ள விநாயகப் பெருமானுக்கு சிறப்புப் பூசை வழிபாடுகளும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றன. (ப-66)



பிரசித்திபெற்ற இணுவில் சிவகாமி அம்மன் ஆலய சோபகிருது வருட மஹோற்சவப் பெருவிழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் உற்சவங்கள் நடைபெறும். (ப-66)

கிறிசலிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் பெண்களின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வரும் உற்பத்திப் பொருள்களின் பன்முகச் சந்தை, மன்னார் மாவட்டச் செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் மன்னார் செயலர் கே.கனகேஸ்வரன், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், கிறிசலிஸ் நிறுவனத்தின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ப-56)





நட்டாங்கண்டல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் 99 ஆவது இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், நட்டாங்கண்டல் பிரதேச மருத்துவ அதிகாரி, அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-35)

யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறையின் ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளரும், பன்முக ஆளுமை மிக்கவருமான கலாநிதி. தம்பிஜயா கலாமணியின் உருவச்சிலைத் திறப்புவிழா மற்றும் அனுபவப் பகிர்வு நிகழ்வு என்பன விரிவுரையாளர் அ.பௌநந்தி தலைமையில் அல்வாய் தெற்கில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றன. நிகழ்வில் கலாமணியின் உருவச்சிலையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர். சி.சிவலிங்கராஜா திறந்து வைத்துச் சிறப்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஷ்கண்ணன் 'பல்கலைக்கழகமாக கலாநிதி.த.கலாமணி' எனும் நூலை வெளியிட்டு வைத்து நூல் வெளியீட்டுரையை ஆற்றினார். (ப-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ.இராணுவம் வந்தால் அணுவாயுதப் போர் நிச்சயம்!

## ரஷ்ய அதிபர் புடின் அறிவிப்பு



மொஸ்கோ, மார்ச் 15

'ரஷ்யா அணுசக்தி யுத்தத்துக்கு தொழில்நுட்பரீதியாக தயாராக உள்ளது. உக்ரைனுக்கு அமெரிக்கா துருப்புகளை அனுப்பினால் அது போரின் குறிப்பிடத்தக்க விரிவாக்கமாக கருதப்படும்' -இவ்வாறு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மேற்குலக நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் கடுமையான எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

மொஸ்கோவில் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே புடின் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எனக்கு இன்னும் ஆறு ஆண்டுகள் அதிகாரம் கிடைக்கும் என்பது உறுதியாகியுள்ளது. இந்தக் காலகட்டத்தில் ரஷ்யாவின் பாதுகாப்பை நான் நிச்சயம் பலப்படுத்துவேன். உக்ரைனில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், அணுவாயுத உபயோகம் தொடர்பான இராணுவ தொழில்நுட்பக் கண்ணோட்டத்தில், நாங்கள் நிச்சயமாகத் தயாராக இருக்கிறோம். ரஷ்ய எல்லையில் அல்லது உக்ரைனில் அமெரிக்கா தமது துருப்புகளை நிலைநிறுத்தினால் ரஷ்யா இந்த நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதை அமெரிக்கா புரிந்து கொண்டுள்ளது. எனவே, அணுசக்தி மோதல் விரைந்து வருவதாக நான் நினைக்கவில்லை. ஆனால், நாங்கள் இதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதை உறுதியாகவும் திடமாகவும் தெரிவிக்க முடியும். உக்ரைன் விவகாரத்தில் தீவிர பேச்சுகளுக்கு ரஷ்யா தயாராக உள்ளது. ஆனால், அவை யதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும் - என்றார். (ம)

### மார்ச் 20...

குறித்த பிரேரணை மீது மூன்று நாள்கள் விவாதத்தை எதிரணி கோரி இருந்தாலும் இரு நாள்களே வழங்கப்பட்டுள்ளது. இதன்படி மார்ச் 19 மற்றும் மார்ச் 20ஆம் திகதிகளில் விவாதம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற நடவடிக்கை தொடர்பான குழு நேற்றுக் கூடியபோதே இது தொடர்பில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசியல் வரலாற்றில் சபாநாயகர் ஒருவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்புக்கு வருவதால் இந்த விவகாரம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

நிகழ்நிலைக் காப்புச்சட்ட விவகாரத்தில் உயர்நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் செயற்படாமை, நாடாளுமன்ற சம்பிரதாயம் மற்றும் அரசமைப்பை மீறியமை, பொலிஸ்மா அதிபர் நியமன விடயத்தில் அரசமைப்புக்கு முரணாகச் செயற்பட்டமை உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக்கொண்டே நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள் ளது.

இந்தப் பிரேரணைக்கு எதிரணியில் உள்ள அனைத்துத் தரப்பினரும் ஆதரவு தெரிவித்துள்ளனர். இதனால் நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் எதிரணி ஒன்றுபட்டுள்ளது. அரசின் பலத்தைக் காட்டுவதற்கு இதனை வாய்ப்பாகப் பயன்படுத்துவதற்கு ஆளுங்கட்சி முயற்சித்துவருகின்றது. எனவே, அடுத்தவாரம் கொழும்பில் முகாமிட்டு இருக்குமாறு ஆளுங்கட்சியினர் மேல்மட்டங்களால் பணிக்கப்பட்டுள்ளனர். (அ-ம-44)

### உழவியந்திரம்...

உழவியந்திரம் ஒன்று நேற்றுத் தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த மூன்று மாணவர்கள் காயமடைந்தனர்.

முல்லைத்தீவு - முள்ளியவளைப் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றின் இல்ல மெய்வன்மைப் போட்டிக்கான தயார்ப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போதே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

உழவியந்திரப் பெட்டியில் பத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் சென்றனர் எனவும் விபத்தையடுத்து மூவர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. காயமடைந்த மாணவர்கள் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்துத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-19)

### 38 ஆவது...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் பல்கலைக்கழக வேந்தர் வாழ்நாள் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில் பட்டமளிப்பு கோலாகலமாக ஆரம்பமானது. பட்டமளிப்பின் முதலாவது பகுதி இன்று வெள்ளிக்கிழமை, நாளை சனிக்கிழமை ஆகிய தினங்களிலும் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளது.

குறித்த பட்டமளிப்பு விழாவில் 2 ஆயிரத்து 873 பேருக்குப் பட்டங்கள் வழங்கப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளன. 46 தங்கப் பதக்கங்கள், 9 புலமைப் பரிசில்கள் மற்றும் 48 பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (அ-ம-66)

### இது...

சிங்களத் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே பசில் ராஜபக்ச இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பொதுஜன பெரமுனவின் ஆட்சிதானா என்ற சந்தேகம் எமக்கும் உள்ளது. பசுவின் முன்பகுதி மட்டுமே எங்கள் வசம் உள்ளது. பின்பகுதி வேறு இடத்தில்தான் உள்ளது. அத்துடன், ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல்களை ஒத்திவைக்க இடமளிக்கப்போவதில்லை. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டும்.

தேர்தலைப் பிற்போடுவதற்கு நாம் எதிர்ப்பு. ஜனாதிபதி, பொதுத்தேர்தல் என்பன உரிய காலப்பகுதிக்குள் நடத்தப்பட வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டில் இருக்கின்றோம், அதற்காக முன்னிலையாவோம். தேர்தல் நடக்குமா என்ற சந்தேகம் எமக்கும் உள்ளது. ஆனால், அது நடத்தப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

இது பொதுஜன பெரமுனவின் ஆட்சி எனப் பலர் கூறினாலும், எமது அரசா என்று எமக்கும் சிலவேளைகளில் சந்தேகம் ஏற்படுகின்றது. வடகிழக்கு, ஊவா, கிழக்கு உட்பட ஐந்து மாகாணங்களில் எமக்கு அமைச்சர் ஒருவர் இல்லை. எனவே, இது எப்படி எமது அரசு எனக் கூறமுடியும்?

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டும். ஏனெனில் ஜனாதிபதித் தேர்தலை நடத்திவிட்டு பொதுத்தேர்தலுக்குச் சென்றால் வெற்றி பெற்ற கட்சிக்கே வாய்ப்பு அதிகம், அதன் மூலம் மக்களின் உண்மையான நிலைப்பாடு தென்படாது" - என்றார். (அ-ம-44)

### கைதானோருக்காக...

ஆலய பரிபாலன சபையின் ஏற்பாட்டில் வவுனியா, நெடுங்கேணிச் சந்தியில் இன்றைய போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேவேளை - தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு நீதிகோரி பாதிக்கப்பட்டவர்களின் உறவுகளின் ஏற்பாட்டில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் வவுனியா நகரிலும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இந்தப் போராட்டங்கள் பெருமளவு எண்ணிக்கையுடன் பொதுமக்களைக் கலந்துகொண்டு போராட்டத்துக்கு வலுச்சேர்க்கவேண்டும் என்று ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர். (அ-ம-66)

### வாக்கெடுப்பின்...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற நடவடிக்கை தொடர்பான குழுக் கூட்டத்தின் பின்னரே ஊடகங்களிடம் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இது தேவையற்றதொரு பிரேரணையாகும். நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாம் நிராகரிக்கின்றோம். சபாநாயகரை நாம் பாதுகாப்போம். பிரேரணையைத் தோற்கடிக்க நடவடிக்கை எடுப்போம். கூட்டத்துக்கு சபாநாயகர் தலைமை தாங்கினாலும் அவர் அநீதியான முறையில் செயற்படவில்லை. விவாதத்துக்கு இருநாள்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதேவேளை, எந்தப் பூ மலர்ந்தாலும் மொட்டு இருந்தால்தான் பூ மலரும் என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றேன்" என்று சாகர காரியவசம் மேலும் தெரிவித்தார். (அ-ம-44)

### கைதானவர்கள்...

வியாழக்கிழமை மூன்றாவது நாளாகவும் தொடர்ந்தது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் உணவை உட்கொள்ள ஆரம்பித்துள்ளனர் என்று சிறைச்சாலை நிர்வாகத்தால் ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்ட போதிலும், பின்னர் விளக்கமறியல் கைதிகளை நேரில் பார்வையிட்ட சட்டத்தரணிகள் அவர்கள் எவரும் உணவுண்ணவில்லை என்பதையும், உணவு தவிர்ப்புப் போராட்டம் தொடர்கின்றது என்பதையும் உறுதிப்படுத்தினார்கள். (அ-ம-110-18)

### யானை...

பகுதிக்கு தொழில் நிமித்தம் சென்றுள்ளனர். காணியொன்றுக்குள் தோட்டம் செய்துவந்தபோதே, அவர்களின் வீட்டுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை இரவு யானையொன்று வந்துள்ளது. யானையில் இருந்து தப்பிப்பதற்காக வீட்டைவிட்டு வெளியேறியபோது அந்தப் பெண் கீழே விழுந்துள்ளார். இதையடுத்தே அவர் யானை மிதித்து உயிரிழந்தார். கயனி மதுவயந்தி குமாரி (வயது-29) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார். இறப்பு விசாரணைகளை மரண விசாரணை அதிகாரி ஏ. ஆர்.நசீர் மேற்கொண்டார். (அ-ம-60)

### 278 ஏக்கர்...

அறியமுடிகின்றது. யாழ். மாவட்டத்துக்கு வருகைதரும் ஜனாதிபதி பலாலி மத்தியில் விடுவிப்புக்காக அளவீடு செய்யப்பட்டுள்ள காணிகளை விடுவிக்கவுள்ளதுடன், காணி உறுதியற்ற 400 பேருக்கு காணி உறுதிகளையும் வழங்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

### தண்ணீர்த்...

விசாரணையில் தெரியவந்துள்ளது. இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*ராபா பகுதியில் இருந்து*

# பெருமளவு சிறுவர்களை வெளியேற்றிய ஜேர்மனி!

காஸாவில் உள்ள ஒரு உதவி மையத் தில் இருந்து மேற்கு கரைக்கு சிறுவர்கள் மற்றும் பணியாளர்களை வெளியேற்றுவதற்கான உதவிகளை ஜெர்மனியின் மேற்கொண்டுள்ளது.

இதன்படி, 68 சிறுவர்கள், 11 பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் ராபா நகரில் இருந்து இவ்வாறு தற்காலிகமாக வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று ஜெர்மனின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமங்கள் எனும் தன்னார்வ தொண்டு நிறுவனம் கடந்த நவம்பர் மாதம் ஜேர்மனியின் வெளிவிவகார அமைச்சிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தமது தீவிர முயற்சி இறுதியில் வெற்றியடைந்ததில் நிம்மதியடைவதாக ஜேர்மனியின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வெளியேற்றமானது இஸ்ரேலில் உள்ள தீவிர வலதுசாரி அரசியல்வாதிகளின் விமர்சனத்தை எதிர்கொண்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (ம)




இலங்கை உடற்கட்டமைப்பு மற்றும் உடற்பயிற்சிக் கூட்டமைப்பு சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட சர்வதேச 'Body Bulding fitness coaching மற்றும் judging' ஆகிய இரண்டு பரீட்சைகளில் பருத்தித்துறை சுப்பர்மடத்தைச் சேர்ந்த பகீரதன் ரூபன் சித்தியடைந்து சாதனை படைத்துள்ளார். அதற்கான சான்றிதழ்கள் இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சகத்தில் இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ முன்னிலையில் அண்மையில் வழங்கப்பட்டன. (ப-100)


**Grade 10-11 Science**
**A/L Chemistry English Medium**
2024, 2025 Batch Tamil/ English ஆசிரியரால் (B.Sc, M.Sc Chemistry) குழுவாகக் கற்பிக்கப்படும்.
**076 410 5838**

## வீடு விற்பனைக்கு

**இருபாலை டச்சு வீதியில்** (மதுரம் கல்வி நிலையம் முன்பாக) **வீதியிலிருந்து 2ம் காணி,** 1.5 பரப்பு காணியில் அமைந்த தற்போது கட்டி முடிந்த
( 95% வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன )
**1733 சதுர அடி கொண்ட புதிய வீடு விற்பனைக்கு.**
(தரகர் தேவையில்லை)
(CS/28191) J-1
**077 809 3293, 076 270 2176**

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



அன்புடையீர்!
கடந்த 17.02.2024 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்
அமரர்
**நாகப்பர் நாகேஸ்வரன் (நவம்)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் (18.03.2024) திங்கட்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நடைபெறும். அந்நிகழ்வுகளில் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திப்பதோடு மறுநாள் 19.03.2024 செவ்வாய்க்கிழமை பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். எங்களது அழைப்பிதழ் கிடைக்கப் பெறாத பட்சத்தில் இதனை அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி
இங்ஙனம்
**குடும்பத்தினர்.**
**15 ம் கட்டை,**
**உடுப்பிட்டி தெற்கு, உடுப்பிட்டி.**
**076 872 2221**
(CS/28185) J-1

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

கடந்த 14.02.2024 புதன்கிழமை
சிவபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவி
**அமரர் தங்கமணி அமிர்தலிங்கம்**
**(குஞ்சு)**



அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று முன்தினம் புதன்கிழமை (13.03.2024) அன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. இன்று (15.03.2024) வெள்ளிக்கிழமை வீட்டுக்கிருத்தியம் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.**

எமது குடும்பக் குலவிளக்கின் மரணச்செய்தி அறிந்து நேரிலும், ஊடகங்கள் மூலமும் துக்கங்களை பகிர்ந்தோருக்கும், அஞ்சலிப் பிரசுரங்களையும், பதாகைகளையும் வெளியிட்டு அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், எமக்கு உணவுகள் தந்த பெருமைக்குரியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**"தாஜ்மஹால்"**
**கைதடி தென்கிழக்கு, கைதடி**
(CS/54378) J-1
**குடும்பத்தினர்**
**077 632 7690**

தோற்றம்
**29.11.1951**
மறைவு
**14.02.2024**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.